TAMIL

# சத்திய மார்க்கம்

e Co-operative Office for Call & foreigners Guidance at Sultanah
der the supervision of Ministry of Islamic Affairs and Endowment and Propagation and Guidance
. 4240077 Fax 4251005 P.O.Box 92675 Riyadh 11663 E-mail : Sultanah22@hotmail.com

**الدين الحق - اللغة: التاميلية**

إعداد وترجمة: **شعبة توعية الجاليات في الزلفي**

الطبعة الأولى: ١٤١٧/١١ هـ.

ⓒ شعبة توعية الجاليات في الزلفي ، ١٤١٧هـ

*فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر*

شعبة توعية الجاليات بالزلفي

الدين الحق - الزلفي.

٢٤ ص ؛ ١٠ × ١٤ سم

ردمك : ٩ - ٣٣ - ٨١٣ - ٩٩٦٠

(النص باللغة التاميلية)

١- الإسلام ٢- التوحيد ٣- العقيدة الإسلامية

أ- العنوان

ديوي ٢٤٠ ١٧/٢٩٦٦

رقم الايداع ١٧/٢٩٦٦

ردمك : ٩ - ٣٣ - ٨١٣ - ٩٩٦٠

الصف والإخراج: **شعبة توعية الجاليات في الزلفي**

# முன்னுரை

உங்கள் கைகளில் தவழும் இப்புத்தகம் இஸ்லாத்தைப் பற்றி மிகச்சுருக்கமாக எடுத்துச் சொல்கிறது.

இதைப் படித்ததற்குப் பின்னால், இவ்வுலகில் பல்வேறு நாடுகளில் வாழும் 120 கோடிக்கும் அதிகமான மக்கள் பின்பற்றுகின்ற இம்மார்க்கத்தின் அடிப்படைகள் பற்றிய ஒரு தெளிவான சிந்தனையைப் பெறுவீர்கள்.

மேலும் இம்மார்க்கத்தைப் பற்றிய கூடுதலான விளக்கம் ஏதும் தேவைப்பட்டால் நாங்கள் பதில் சொல்வதற்கும் இம்மார்க்கம் சம்பந்தப்பட்ட வேறு பல புத்தகங்கள் தருவதற்கும் தயாராக உள்ளோம்.

---

*குறிப்பு:* (ஸல்) அவர்கள் என்று வரும் இடங்கள் முஹம்மது நபியைக் குறிக்கும்

லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற ஏகத்துவக் கலிமா தான் இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படைச் சட்டமாகும். இந்த அடிப்படை வாய்ந்த உறுதியான சட்டமின்றி உயர்ந்த இஸ் லாமியக் கட்டடம் நிலை பெறாது இதுவே இஸ்லாத்தில் நுழைபவன் ஆரம்பமாக அவசியம் மொழிய வேண்டிய கலி மாவாகும் இதை மொழிபவன் இதன் அர்த்தங்களையும் அ வை அறிவித்துவிட்டவற்றையும் உறுதியாக நம்பவேண்டும்.

## லாஇலாஹ இல்லல்லாஹ்வின் பொருள்:

லாஇலாஹ இல்லல்லாஹ் என்பதின் பொருள் இவ்வுலகை அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் படைக்கவில்லை, இவ் வுலகை நிர்வகிப்பவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில் லை,வணக்கத்திற்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை என்பதாகும்.

## அல்லாஹ் படைப்பாளன்:

நூதனமான, அழகான, விசாலமான இவ்வுலகை அல் லாஹ்தான் படைத்தான். வினோதமான நட்ஷத்திரங்களும், நீந்துகின்ற கோளங்களும் அமைந்த வானத்தையும் அல் லாஹ்தான் படைத்தான். மலைகள், ஓடைகள், பரந்த மலை கள்,ஆறுகள்,மரங்கள்,தோட்டங்கள், காற்று, தண்ணீர், திடல், கடல்,இரவு,பகல் ஆகியவற்றையும், இவற்றில் வசித்து வரு பவர்கள், நடந்து செல்பவர்கள் ஆகிய அனைவரையும் உள்ள டக்கிக் கொண்டிருக்கும் பூமியையும் படைத்தவன் அல் லாஹ்தான். இல்லாமலிருந்த இவற்றை அவனே உருவாக்கி னான். இவை மகத்துவமிக்க அல்லாஹ்வின் படைப்பாகும்.

அல்லாஹ் பூமியை தங்குமிடமாக்கி, அதில ஜீவிப்பதற் குத் தேவையான, தோதுவான, குறிப்பிட்ட ஈர்ப்பு சக்தியை அமைத்து வைத்துள்ளான். அது அதிகரிக்கவும் குறையவும் செய்யாது. அதிகமாகிவிட்டால் அதன் மீது ஆட, அசைவது

சிரமமாகிவிடும். குறைந்துவிட்டால் அதில் ஜீவிக்கின்ற அனைத்தும் பறந்துவிடும். அனைத்து வஸ்துக்களுக்கும் அவனிடம் ஓர் அளவுள்ளது. வானிலிருந்து தூய்மையான தண்ணீரை இறக்கிவைத்தான். அத்தண்ணீரின்றி வாழக்கையை நடத்த முடியாது. அத்தண்ணீர் மூலம் செடி, கொடிகளையும் பழவர்க்கங்களையும் அவனே வெளிப்படுத்துகிறான். ஆடு,மாடு, ஒட்டகம் போன்ற கால்நடைகளுக்கும் மனிதர்களுக்கும் அதைக் குடிநீராக்கியுள்ளான். அத்தண்ணீரைப் பாதுகாத்துக் கொள்ளத் தோதுவாக பூமியை அமைத்துள்ளான். அதில் ஊற்றுக்களையும், ஆறுகளையும் ஓடவிட்டுள்ளான்.

அல்லாஹ் படைத்த முதல் மனிதர், மனிதர்களின் தந்தையான ஆதம் (அலை) அவர்கள். அவரைக் களிமண்ணால் உருவாக்கி பின்னர் அதைச் சமப்படுத்தி உருவமைத்தான். அதில் தனது உயிரை ஊதினான். பின்னர் அதிலிருந்து அதற்கான ஜோடியைப் படைத்தான். பின்னர் அற்பத்துளியான இந்திரியத் துளியிலிருந்து அவரது சந்ததியினரைப் படைத்தான்.

உன்னைப் படைத்த அல்லாஹ்வைச் சிந்தித்துப் பார்! நுட்பமான பல கருவிகளையும் பல்வேறு அமைப்புகளையும் உன்னில் நீ காண்பாய். அதன் செயல்பாடுகளில் குறைவானதைத்தான் உன்னால் அறிந்துகொள்ள முடியும். அவ்வாறிருக்க அவற்றை நீ முழுமையாகத் தெரிந்து கொள்வதென்பது முடியாத காரியமாகும். அங்கு உணவை ஜீரணிக்கச் செய்வதற்கான ஒரு கருவி, சுவாசிப்பதற்கான வேறு ஒரு கருவி, நரம்புகளை இயக்க மற்றொரு கருவி, தேவையற்றவற்றை வெளியேற்றுவதற்கு ஒரு கருவி இப்படியே நாம் கணக்கிட்டுக் கொண்டிருந்தால் ஒவ்வொரு நாளும் நாம் அதிகமதிகம் அறிந்துகொள்ள முடிகின்ற ஏராளமான கருவிகள் நம்மிலிருப்பதை அறிந்து கொள்ள முடியும். நாம் அறிந்துள்ளவற்றைவிட

நாம் அறியாதவையே நம்மில் அதிகமுள்ளன. உறுதி வாய்ந்த இந்த அமைப்பிலுள்ள மனிதனை அல்லாஹ் அல்லாத வேறு யார் படைக்க முடியும்?

எனவே தான் பாவங்களில் மிகப்பெரும் பாவம் அல்லாஹ் உன்னைப் படைத்திருக்க அவனுக்கு நீ இணை கற்பிப் பதாகும். நூதனமான அல்லாஹ்வின் படைப்பின்பால் திறந்த உள்ளத்துடன் சிந்தித்துப் பார்! இதோ நீ சுவாசிக்கும் இக் காற்று எல்லா இடங்களிலும் நுழைகின்றது. அது பார்வைக ளுக்குப் புலப்படாததாகவும் நிறமற்றதாகவுள்ளது. சில நிமி டங்கள் அக்காற்று நின்றுவிடுமானால் நீ மரணித்துவிடுவாய். என்பதை நீ சிந்தித்துப் பார்! நீ அருந்தும் தண்ணீரும் உண் ணும் உணவும் நீ நேசிக்கின்ற பிறமனிதர்களும் நீ நடந்து செல்கின்ற இப்பூமியும் நீ காணுகின்ற வானமும் இன்னும் நீ பார்க்கின்ற எல்லாப் பொருட்களும், உன்னால் காண முடியாத இப்படைப்பினங்களில் சிறிதும் பெரிதுமான சகல வஸ்துக் களும், யாவற்றையும் அறிந்தவனான அல்லாஹ்வின் படைப் பிலுள்ளவையாகும்.

அல்லாஹ்வின் படைப்புகளைச் சிந்திப்பதின் மூலம் அல்லாஹ்வின் கண்ணியத்தையும் அவனது வல்லமையையும் நாம் அறிந்து கொள்ள முடியும். மிகப்பெரும் நுட்பமும் பேராற்றலும் மிக்க இப்பிரமாண் டமான, நூதனமான, உறுதிமிக்க, பின்னிப் பிணைந்துள்ள இப்படைப்பினங்கள் இல்லாமலிருந்து அவற்றை உருவாக்கிய படைப்பாளனை நம்பாதவன் தான் மனிதர்களில் மிகப் பெரும் மடை மயும் வழிகேடும் உடையவன். மகத்துவமிக்க இப்படைப்பாள னைப் போன்று வேறெதுவுமேயில்லை. அவன் யாவற்றையும் கேட்பவன் யாவற்றையும் பார்ப்பவன். அவனுக்கு நிகராக அவனின் படைப்பினங்களில் எதுவுமேயில்லை. அல்லாஹ்

நம்மை வானத்திற்கு மேலிருந்து பார்த்துக் கொண் டிருக்கிறான். நாம் அவனைக் காணமுடியாது.

அல்லாஹ் எல்லா வஸ்துக்களின் மீதும் ஆற்றலுள்ளவன். வாழ்வும் மரணமும் அவனது கையில்தானிருக்கிறது. எல்லாப் படைப்பினங்களும் அவன் பாலே தேவையாகின்றன. அவன் அனைத்தை விட்டும் தேவையற்றவன். சகல வஸ்துக்களை யும் சூழ்ந்தறிபவன். நமது நாவுகள் பேசுபவற்றையும் நமது உ றுப்புகள் செய்பவற்றையும் அவன் அறிவான், மட்டுமின்றி நம து உள்ளங்கள் மறைத்து வைப்பவற்றையும் அறிவான்.

அல்லாஹ் நம்மை நன்கு அறிபவனாகவும் நமது செயல் களை உள்விளங்கி அறிபவனாகவுமிருக்கிறான். வானம், பூமி யிலுள்ள எப்பொருளும் அவனுக்கு மறைந்நததாக இல்லை. அவன் பராமுகமாகவோ, மறக்கவோ, தூங்கவோ மாட்டான். குறைவும் குறையுமில்லாத பூரணமான தன்மைகள் அவனுக் கு இருக்கின்றன. அல்லாஹ்வின் ஆட்சியில் அவனுக்கு நிக ராக, இணையாக, ஒப்பாக எவருமில்லை. மனைவி, குழந் தையை விட்டும் தூய்மையானவன். மட்டுமல்ல அவன் இவ் வனைத்தையும் விட்டும் தேவையற்றவன். எனவேதான் வணக்கத்தில் எதையும் அல்லாஹ் அல்லா தவனுக்குச் செலுத்தக் கூடாது என லாஇலாஹ இல்லல்லாஹ்விற்கு அர்த்தம் கொள்ளப்படுகிறது.

எனவே உண்மையில் வணங்கத் தகுதியானவன் அல் லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவனே இறைத் தன்மைகளும் பூரணமும் உள்ளவனென வர்ணிக்கப்பட வேண் டியவன். அவனே படைப்பாளன், உணவளிப்பவன், உபகாரி, உயிரளிப்பவன், மரணமாக்குபவன், தன் படைப்பினங்களுக்கு உதவி புரிபவன், அவன் மட்டுமே வணங்கத் தகுதியானவன். இணையற்றவன். எனவே ஒருவன் அல்லாஹ்வை விடுத்து அ வனல்லாதவனை வணங்கினால் அவன் இணைவைத்தவனா

கவும் நிராகரித்தவனாகவும் ஆகிவிடுகிறான். ஆகவே சாஷ்டாங்கமாக விழுதல், குனிதல், பயத்துடன் பணிதல் ஆகியவற்றை அல்லாஹ் அல்லாதவனுக்குச் செலுத்தக் கூடாது.

அல்லாஹ்விடமே அபயம் தேட வேண்டும், பாதுகாப்புத் தேட வேண்டும், பிரார்த்தனை செய்ய வேண்டும். அல்லாஹ்விடமே தேவைகளைக் கேட்க வேண்டும். வணக்க, வழிபாடுகள் கொண்டு அவனை நெருங்க வேண்டும். இவற்றில் எதனையும் அல்லாஹ் அல்லாதவருக்குச் செலுத்துவது கூடாது. அல்லாஹ்,அவனை நாம் வணங்குவதற்காகவும் அவனது வணக்கத்தை சரியாகச் செய்து வெற்றி பெறுகிறோமா எனச் சோதிப்பதற்காகவுமே நம்மைப் படைத்துள்ளான். எனவே யார் அல்லாஹ்வை வணங்கி, விரும்பி, பணிந்து, அவனது ஏவல்களுக்குக் கட்டுப்பட்டு, விலக்கல்களைத் தவிர்ந்து கொண்டால் அவர் அல்லாஹ்வின் திருப்பொருத்தத் தையும் அன்பையும் அடைந்து கொள்கிறார். அவருக்கு அவன் அழகிய கூலி வழங்குவான். எவன், அல்லாஹ் அவனைப் படைத்து, உணவு வழங்கிக்கொண்டிருக்க அவனை வணங்குவதை விடுத்து, தற்பெருமை கொண்டு, அவனது ஏவல்களுக்குக் கட்டுப்படாமல், விலக்கல்களைத் தவிர்ந்து கொள்ளாமலிருக்கிறானோ அவன் அல்லாஹ்வின் கோபத்திற்கும் வேதனைக்குரிய தண்டனைக்கும் ஆளாகிவிடுகிறான். அல்லாஹ் நம்மை வீணாகப் படைக்கவுமில்லை, வெறுமனே விட்டுவிடவுமில்லை. இவ்வுலகுக்கு வந்த மனிதர்களில், தனக்குக் கேள்வி, பார்வை வெகுமதியாக வழங்கப்பட்டுள்ளன என்றும், பின்னர் சில காலம் வாழ்ந்து மரணித்து விடுகிறான் எனவும், இவ்வுலகிற்கு எப்படி, எங்கிருந்து வந்தான், பின்னர் எங்கே செல்ல இருக்கிறானெனத் தெரியாமலும் இருக்கிறானே அவன் தான். மிகப் பெரும் மடையன். அல்லாஹ் கூறுகிறான்: **உங்களை நாம் படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள்**

நம்மிடம் மீட்டப் படமாட்டீர்களென்றும் எண்ணிக் கொண் டீர்களா? (23:115).

நம்மில் இறைவனை நம்பி, அவன்மீதே நம்பிக்கைக் கொண்டு, அவனது சட்டப்படியே நடந்து, அவனை நேசித்து, பணிந்து, வணக்க, வழி பாடுகள் மூலம் அவனை நெருங்கி, அவனுக்கு விருப்பமானவற்றைத் தேடிக் கொண்டிருப்பவனும், படைத்து, உருவமைத்த அல்லாஹ்வை நிராகரித்து, அவனது அத்தாட்சிகளைப் பொய்ப்படுத்தி, அவனது ஆணைக்குக் கட்டுப்படுவதை விட்டுவிடுகிறானோ அவனும் அல்லாஹ்விடம் சமமாகமாட்டார்கள். முதலாமவன் அல்லாஹ்விடம் கண்ணியம், நற்கூலி, அன்பு, திருப்தி ஆகியவற்றை அடைந்து கொள்கிறான். இரண்டாமவனை கோபம்,தண்டனை, இழிவு பிடித்துக் கொள்ளும்.

இது மக்கள் மரணமடைந்து, அவர்களின் மண்ணறைகளிலிருந்து எழுப்பப்படும் நாளிலாகும். அந்நாளில் நேர்மையாக நடந்து கொண்டவர் அருள் மிக்க சுவர்க்கமும். மரியாதையும் கூலியாக வழங்கப்படுவார்.அல்லாஹ்வை வணங்காமல், பெருமையாக நடந்து கொண்ட கெட்டவன் நரகில் தண்டிக்கப்படுவான்.

**முஹம்மத் அல்லாஹ்வின் திருத்தூதர்:**

முஹம்மது (ஸல்) அவர்களின் தூதுவத்தை நம்புவது இஸ்லாமிய அடிப்படைத் தூண்களில்களின் முதல் கடமையில் இரண்டாவது பகுதியாகும். இது கட்டடம் எதன் மீது அமையுமோ அப்படிப்பட்ட தலையாய அடிப்படையாகும். (லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மது ரசூலுல்லாஹ்) என்ற இவ்விரண்டையும் மொழிவதின் மூலம் ஒருவன் முஸ்லிமாகி விடுகிறான். (எனவே விரும்புபவன்) வணக்கத்திற்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை,

முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதரென சாட்சி பகர வேண்டும்.

**ரசூலின் அர்த்தமென்ன ? முஹம்மது (ஸல்) அவர்கள் யார் ? அவர்களல்லாத வேறு தூதர்கள் உள்ளனரா ?:**

ரசூல் என்பவர் உண்மை பேசும், அழகிய குணங்களுள்ள, உயர்ந்த தன்மையுள்ள மனிதர். மனிதர்களிலிருந்தே அல்லாஹ் அவர்களைத் தேர்வு செய்கிறான், மார்க்க அல்லது மறைந்த விஷயங்களில் தான் விரும்பியவற்றை அவருக்கு அறிவித்துக் கொடுக்கிறான். அவற்றை அவர் மக்களுக்கு எத்தி வைக்கும்படி ஏவப்படுவார். எனவே ரசூலென்பவர் ஏனைய மனிதர்களைப் போன்ற ஒரு மனிதரே. அவர்கள் சாப்பிடுவது போன்று இவரும் சாப்பிடுவார், அவர்கள் குடிப்பது போன்று இவரும் குடிப்பார், அவர்களுக்குத் தேவையானவை இவருக்கும் தேவையாகும். ஆயினும் அல்லாஹ்விடமிருந்து வருகின்ற இறைச்செய்தி கொண்டு ஏனைய மனிதர்களை விட்டும் வித்தியாசப்படுகிறார். அவர் மக்களுக்கு எத்திவைக்க வேண்டிய மார்க்க, மறைவான விஷயங்களில் எவற்றைஅவன் விரும்புகிறானோ அவற்றை அவருக்கு அறிவத்துக் கொடுக்கிறான். இன்னும் அவர் பெரும் பாவங்களில் விழுந்து விடாமலும், அல்லாஹ்வின் தூதுச் செய்தியை மக்களுக்கு எத்தி வைப்பதில் தவறு செய்திடாமலும் அல்லாஹ் பாதுகாத்து வைத்துள்ளான் என்ற இந்த விஷயத்திலும் அவர் ஏனைய மனிதர்களை விட தனித் தன்மையுடையவராக இருக்கிறார்.

அபுல் பஷர் (மனிதர்களின் தந்தை) ஆதமுக்குப்பின் தூதுவர்களில் முதலாமவர் நூஹ் (அலை) அவர்கள். இவருக்கும் ஆதமுக்குமிடையே பத்து நூற்றாண்டுகள் உள்ளன. அல்லாஹ் நூஹ் -நோஹா-(அலை) அவர்களை, அவர்

களின் மக்கள் வழி தவறி, அல்லாஹ் அல்லாத கடவு ள்களை வணங்குபவர் களாகவும், சிலைகள், கற்கள், மண் ணறைகள் ஆகியவற்றை வணங்குபவர்களாகவும் ஆகிவிட்ட பின்னர் அவர்கள் அம் மக்களை அல்லாஹ்வை மட்டும் வணங்குவதின் பால் திருப் பிக் கொண்டுவருவதற்காக அனுப்பி வைத்தான். அவர் நீண்ட காலமாக தனது மக்களை அல்லாஹ்வை மட்டும் வணங்க வேண்டுமென்று அழைப் பதிலேயே நீடித்திருந்தார். எ னினும் அவருடன் குறைவான மக்களே ஈமான் கொண்டனர்.

அல்லாஹ் இவருக்குப் பின்னர் பூமியின் பல்வேறு பகுதி களில் வசிக்கும் மக்ககளுக்கு பல தூதர்களை அனுப்பி வைத்தான். அச்சமூட்டி எச்சரிக்கும் தூதர் வராத எந்த சமு தாயமுமில்லை. அவர்களில் சிலரின் வரலாற்றை அல்லாஹ் ந மக்கு அறிவித்துள்ளான், அதிகமானோர் பற்றி நமக்கு அறி விக்கவில்லை. அவர்கள் அனைவரும் ஒரே செய்தி கொண் டே அனுப்பப்பட்டனர். அச்செய்தி அல்லாஹ்விற்கு எதனை யும் இணையாக்காமல் அவனை மட்டும் வணங்க வேண்டும், அவனல்லாதவன் வணங்கப்படக் கூடாது என்பதாகும்.

முஹம்மது (ஸல்) அவர்கள் இறைத்தூதர்களில் இறுதி யானவர். அல்லாஹ் அவர்களை மக்காவில் திருத் தூதராக் கினான். அவர்கள் இறைத்தூதரென்பதற்கு பல அத்தாட்சி களையும்,அற்புதங்களையும் வழங்கியிருந்தான். தூதுவர்களின் வரிசையை இவர்களைக் கொண்டே முத்திரையிட்டான். அவர்களுக்கு வழங்கிய மார்க்கத்தையே எல்லா மார்க்கங்க ளுக்கும் இறுதி முத்திரையாக்கினான். இம்மார்க்கத்தை உல கம் முடியும் காலம் வரை மாற்ற முடியாத அளவிற்குப் பாது காத்து வைத்துள்ளான். முஹம்மது (ஸல்) அவர்கள் யார் ?

அவர்களின் மக்கள் யார்? அவரை அல்லாஹ் எப்படி அனுப்பி வைத்தான் ?என்பதைப் பார்ப்போம்.

**அவரின் குடும்பமும் சிறப்பும்:**
முஹம்மத் அப்துல்லாஹ்வின் மகன் ஆவார். அவரின் பாட்டனார் அப்துல் முத்தலிப் .இவர் குறைஷி குலத்தைச் சார்ந்தவர். முஹம்மத் கி.பி. 571 ல் மக்காவில் பிறந்தார். தனது தாயின் வயிற்றிலிக்கும்போதே தந்தையை இழந்தார். அவரது பாட்டன் அப்துல் முத்தலிபின் பராமரிப்பில் அனாதையாக வளர்ந்து வந்தார். அவரின் பாட்டன் மரணமடைந்த பின்னர் அவரது பெரிய தகப்பானர் அபூ தாலிப் அவரை பராமரித்து வந்தார்.

**இலட்ஷணங்கள்:**
முஹம்மது (ஸல்) அவர்கள் உண்மையாளர்,நம்பிக்கைக் குரியவர், அழகிய குணமுடையவர், சுவையாகப் பேசுபவர், தெளிவான பாஷையில் பேசுபவர், நெருங்கியவர், தூரமானவர் அனைவராலும் விரும்பப்பட்டார்,தனது மக்களால் கண்ணியப் படுத்தப்பட்டார், அல்அமீன் (நம்பிக்கைக்குரியவர்) என்ற பட்டப் பெயர் சூட்டப்பட்டிருந்தார். அம்மக்கள் பயணம் மேற் கொள்கிறபோது தங்களின் பொருள்களை அவரிடமே ஒப்ப டைத்துச் செல்வர். அழகிய குணமுடையவராக இருந்த அவர் அழகிய தோற்றமுடையவராகவுமிருந்தார். அவரைப் பார்ப்பவரின் கண் சோர்வடையாமல் பார்த்துக் கொண்டிருக் கும்.

**குறைஷியர், அரபியர்:**
நபி (ஸல்) அவர்களும் அவர்களின் குடும்பத்தினரும் மக்கா முகர்ரமாவில் சிறப்புமிக்க கஃபத்துல்லாஹ்வின் சுற்றுப்

புறத்தில் வசித்து வந்தனர். அம்மக்களும் அம்மக்களின் கோத்திரத்தினரும், கல், மரம், தங்கம் போன்றவற்றில் சிலைகள் செய்து அவற்றை கஃபத்துல்லாஹ்வின் சுற்றுப்பாகங்களில் வைத்துக் கொண்டனர். அவை தூய்மையானவை எனவும் அவற்றின் கைகளில் தாம் நன்மை, தீமை உள்ளது எனவும் நம்பினர். இத்துடன் வேறு சில விக்கரகங்களையும், மரங்களையும் மக்காவிற்கு வெளியே வைத்து வணங்கினர். அவர்களைச் சுற்றியுள்ள மக்களுடன் இவர்களின் வாழ்க்கை தற்பெருமை, ஆணவம், பிறருக்கு கொடுமை இழைப்பது போன்றவற்றிலேயே இருந்து வந்தது. அவர்களிடம் வீரம், விருந்துபசாரம், உண்மை பேசுவது போன்ற சில நல்ல பழக்கங்களுமிருந்தன.

**முஹம்மது (ஸல்) நபியாக்கப்படுதல்:**

நபி (ஸல்) அவர்கள் தங்களின் நாற்பதாம் வயதில் மக்காவிற்கு வெளியேயுள்ள ஹிராக் குகையிலிருந்து கொண்டிருந்தபோது வானிலிருந்து அல்லாஹ்வின் வஹி இறங்கியது. அவர்களிடம் ஜிப்ரீல் என்ற மலக்கு வந்து,

(யாவற்றையும்) படைத்த உம்முடைய இறைவனின் திரு நாமத்தைக் கொண்டு ஓதுவீராக! அலக் என்ற நிலையிலிருந்து மனிதனைப் படைத்தான். ஓதுவீராக! உமது இறைவன் மாபெரும் கொடையாளன். அவனே எழுதுகோல் கொண்டு கற்றுக் கொடுத்தான். மனிதனுக்கு அவன் அறியாத வற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தான். (96:1 – 5) எனக் கூறினார்.

அம்மலக்கு, (ஸல்) அவர்களை விட்டுச் சென்ற பின்னர் அவர்கள் பயந்து கொண்டு வீட்டிற்குத் திரும்பி தனது மனைவி,ஹதீஜாவிடம் என்னைப் போர்த்துங்கள்,எனக்கு பயமாக இ

ருக்கிறதெனக் கூறினார்கள். ஹதீஜா அவர்கள் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள்: அப்படியெல்லாம் ஒன்றும் ஏற்படாது, அல்லாஹ்வின் மீது ஆணையாக அல்லாஹ் ஒரு போதும் உங்களை இழிவுபடுத்தமாட்டான், நீங்கள் சொந்த, பந்தத்தை அணைத்து வாழ்கிறீர்கள், கஷ்டத்தைத் தாங்கிக் கொள்கிறீர்கள், உண்மைக்காக பாடுபடுபவர்களுக்கு உதவுகிறீர்கள்.

பின்னரும் ஜிப்ரீல் (ஸல்) அவர்களிடம், அவர்களை அல்லாஹ் படைத்த தோற்றத்துடன் வானை அடைத்துக் கொண்டு வந்து முஹம்மதே நான் ஜிப்ரீல், நீங்கள் இறைத் தூதரெனக் கூறினார். பின்னர் மக்கள் அல்லாஹ்வை மட்டும் வணங்கவும், இணைவைப்பு, நிராகரிப்பு பற்றி அவர்களை எச்சரிக்கவும் செய்வதற்கான அழைப்புப் பணி செய்திட அவர்களுக்கு வானிலிருந்து தொடராக இறைச் செய்தி வந்து கொண்டிருந்தது. தனது மக்களில் தனக்கு நெருக்கமானவர்களில் ஒவ்வொருவராக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள அழைக்க ஆரம்பித்தார்கள். முதலாவதாக தனது மனைவி குவைலதின் மகள் ஹதீஜாவும் தனது நண்பர் அபூபக்ரும்தனது பெரிய தகப்பனார் மகன் அலியும் அவர்களை நபியாக ஏற்றுக் கொண்டனர்.

அவர்களின் மக்கள் (ஸல்) அவர்கள் அழைப்புப் பணி செய்து வருவதை அறிந்த போது அவர்களை எதிர்க்கவும்சதி செய்யவும் பகைக்கவும் ஆரம்பித்தனர். ரசூல் (ஸல்) அவர்கள்,அவர்களை இஸ்லாத்தின் பால் அழைத்துக் கொண்டும் லாஇலாஹ இல்லல்லாஹ் எனக் கூறுங்கள் வெற்றி பெறுவீர்கள் எனவும் தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருந்தார்கள். அவர்கள், இவரென்ன கடவுள்களையெல்லாம் ஒரே கடவுளாக ஆக்கப் போகிறாரா? இது ஆச்சரியமான விஷயமாக இருக்

கிறதே! எனக் கூறிக்கொண்டிருந்தனர். அல்லாஹ்விடமிருந்து பல திருவசனங்கள் இறங்கிக் கொண்டிருந்தன. அவை அவர்களை நேர்வழியின் பால் அழைப்பு விடுத்துக் கொண்டும் வழிகேட்டை விட்டும் எச்சரிக்கை விடுத்துக் கொண்டுமிருந்தன. எனினும் இவ்வத்தாட்சிகள் அவர்களிடம் பிடிவாதத்தையும் சத்தியத்தை ஏற்றுக் கொள்வதை விட்டும் பெருமை கொள்வதையும்தான் அதிகப்படுத்தின, இஸ்லாத்தில் இணைவோரை கடும் தொல்லை செய்ய ஆரம்பித்தனர். குறிப்பாக பலவீனர்களை கடும் தொல்லைப்படுத்தினர்.

குறைஷியர் ரசூல் (ஸல்) அவர்களிடம் பொன்னையும் பொருளையும் பல்வேறு ஆசைப் பொருட்களையும் காட்டி அழைப்புப்பணிக்குப் பேரம் பேசினர். அல்லாஹ்வை அன்றி அவர்கள் வணங்கிக் கொண்டும் கண்ணியப்படுத்திக் கொண்டும் இருக்கின்ற கடவுள்களுக்கு தீங்கு ஏற்படுகின்ற இந்தப் பிரச்சாரத்தை விட்டுவிடும்படியும் வேண்டிக் கொண்டனர். (ஸல்) அவர்கள் தங்களின் கொள்கையில் உறுதியாகவே இருந்து வந்தனர். ஏனெனில் இவ்விஷயம் மக்களுக்கு எத்திவைக்க வேண்டுமென அல்லாஹ்வால் ஏவப்பட்ட விஷயமாகும். இதை அவர்கள் விட்டுவிட்டால் அல்லாஹ் அவர்களைத் தண்டித்துவிடுவான். (ஸல்) அவர்களிடம் நான் உங்களுக்கு நன்மையையே விரும்புகிறேன் நீங்கள் என் மக்கள், எனது உறவினர்கள் அல்லாஹ்வின் மீது ஆணையாக எல்லா மக்களிடம் நான் பொய் சொல்லுவதாக வைத்துக் கொண்டாலும் உங்களிடம் பொய் சொல்லமாட்டேன். மக்கள் அனைவருக்கும் நான் கேடு செய்வதாக வைத்துக் கொண்டாலும் உங்களுக்குக் கேடு செய்யமாட்டேன் எனக் கூறினார்கள்.

அழைப்புப் பணியை முடக்கி விட பேரம் பேசியதில் பலன் கிடைக்காமல் போன போது ரசூல் (ஸல்) அவர்களிடமும் அவர்களைப் பின்பற்றியவர்களிடமும் குறைஷியரின்

பகைமை அதிகரித்தது. பின்னர் யதிரிப் பட்டணத்திலிருந்து சிலர் ரசூல் (ஸல்) அவர்களிடம் வந்தனர்.(யத்ரிபென்பது மதீனாவின் பழைய பெயராகும்) (ஸல்) அவர்கள், அவர்களை இஸ்லாத்தின் பால் அழைத்தார்கள். அவர்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். அவர்களுக்கு இஸ்லாத்தைப் போதிப்பதற்காக தனது நண்பர்களில் ஒருவரான முஸ்அப் பின் உமைரை அனுப்பி வைத்தார்கள். அவர்கள் மூலம் மதீன வாசிகளில் அதிகமானோர் இஸ்லாத்தில் இணைந்தனர். அவர்கள் மறுஆண்டு இஸ்லாத்திலேயே இருப்பதாக உடன்படிக்கை செய்வதற்காக (ஸல்) அவர்களிடம் வந்தனர். பின்னர் (ஸல்) அவர்கள் தங்களின் தோழர்களில் கொடுமைக்காளனவர்களை மதீனா நகருக்கு ஹிஜ்ரத் செய்யும்படி ஏவினார்கள். அவர்கள் கூட்டம், கூட்டமாகவும், தனித்தனியாகவும் ஹிஜ்ரத் செய்தனர். (இவர்கள் முஹாஜிர்கள் என அழைக்கப் பட்டனர்). இவர்களை மதீனாவாசிகள் மரியாதை, மகிழ்சியுடன் வரவேற்று தங்களின் இல்லங்கிளில் விருந்தளித்தனர். தங்களின் பொருள்களயும் வீடுகளையும் அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தனர். (இதனால் இவர்கள் அன்ஸார்கள் என அழைக்கப்பட்டனர்). குறைஷியர், இந்த ஹிஜ்ரத்தை அறிந்த போது நபி (ஸல்) அவர்களை கொலை செய்யவும், அவர்கள் தூங்கும் இல்லத்தை முற்றுகையிட்டு, அவர் வீட்டை விட்டு வெளியேறுகிற போது அனைவரும் சேர்ந்து ஒருவர் வெட்டுவது போல ஒரே வெட்டாக வெட்டி விட திட்டமும் தீட்டினர். இவர்களின் சதித் திட்டத்தை விட்டும் அல்லாஹ் (ஸல்) அவர்களை பாதுகாத்தான், அவர்கள் இவர்களுக்குத் தெரியாமலேயே வீட்டைவிட்டு வெளியேறி, அபூபக்ரைச் சென்றடைந்தார்கள். (ஸல்) அவர்கள் அலியை மக்காவில் தங்கி, (ஸல்) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொருள்களை உரியவரிடம் ஒப்படைத் துவி

டக் கூறினார்கள். முஹம்மத் (ஸல்) அவர்களை உயிருட னோ அல்லது பிணமாகவோ கொண்டு வருபவருக்கு விலை உயர்ந்த பரிசளிக்கப்படுமென அறிவிப்புச் செய்தனர். ஆயினும் அல்லாஹ் அவர்களைப் பாதுகாத்தான், அவர்கள் தனது நண் பருடன் சுகமாக மதீனாவை அடைந்தனர்.

நபி (ஸல்) அவர்களை மதீனா வாசிகள் மிகப்பெரும் ஆனந்தத்துடன் வரவேற்றனர். அல்லாஹ்வின் தூதரை வற வேற்பதற்காக தங்களின் வீடுகளை விட்டும் வெளியேறிக் காத்திருந்தனர். அல்லாஹ்வின் தூதர் வந்துவிட்டார், அல் லாஹ்வின் தூதர் வந்துவிட்டாரெனக் கூறிக் கொண்டிருந் தனர்.

இங்கு வந்த பின்னர் (ஸல்) அவர்கள் மக்களை இஸ் லாத்தின் பால் தீவிரமாக அழைப்புக் கொடுக்க ஆரம்பித் தனர். அவர்களைப் பின்பற்றுபவர் அதிகரித்தனர். பல்வேறு இடங்களுக்கு இஸ்லாம் பரவத் தொடங்கி இறுதியாக அவர் கள் எங்கிருந்து வெளியேறினார்களோ அந்த மக்காவிலேயே பரவத் தொடங்கியது. அவர்கள் தனது 63 ஆம் வயதில் மர ணமடைந்தார்கள்.

இதோ இவர்தான் அல்லாஹ்வன் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் .அவரே நபிமார்களில் இறுதியானவர். மனித சமு தாயம் முழுவதற்கும் சுவர்க்கத்தைக் கொண்டு நற் செய்தி சொல்பவராகவும், நரகைப் பற்றி எச்சரிக்கை செய்பவராகவும் அல்லாஹ் அவரை அனுப்பி வைத்தான். (ஸல்) அவர்கள் அச்செய்தியை எத்திவைத்தார்கள், தன்னிடம் ஒப்படைக் கப்பட்டதை நிறை வேற்றினார்கள், சமுதாயத்திற்கு உபதே சம் செய்தார்கள்.

நபி (ஸல்) அவர்களை அல்லாஹ் வானிலிருந்து இறக் கிய திருவசனங்கள் கொண்டு உறுதிப்படுத்தினான். உலகம் தோன்றிய காலம் முதல் இறுதி காலம் வரை உலக மக்கள்

அனைவரும் ஒன்று கூடி, அவர்களில் சிலர், சிலருக்கு உத வி செய்து கொண்டாலும் இது போன்ற ஒன்றை அவர்களால் கொண்டு வரமுடியாது.

இக்குர்ஆன் 114 அத்தியாயங்கள் கொண்டதாகும். 6000 திருவசனங்களுக்கும் அதிகம் அதிலுள்ளன. ஒவ்வொரு கா லத்திலும் வாழக்கூடியவர்களிடமும் அல்லாஹ் இது போன்ற ஓர் அத்தியாயத்தைக் கொண்டு வர சவால்விட்டுக் கொண்டி ருக்கிறான். குர்ஆனில் மிகச் சிறிய அத்தியாயம் மூன்று வச னங்கள் மட்டும் கொண்டதாகும். மக்கள் இது போன்று கொண்டு வந்திருப்பார்களானால் நிச்சயமாக இது அல்லாஹ் விடமிருந்து வந்ததல்ல என அறிந்து கொள்ளலாம். இது அல்லாஹ் தனது தூதருக்கு அருளிய அற்புதங்களில் மிகப்பெரும் அற்புதமாகும். இன்னும் (ஸல்) அவர்களுக்கு வழமைக்கு மாற்றமாக ஏற்படக்கூடிய பல்வேறு அற்புதங்க ளை வழங்கி உதவி புரிந்தான். அவற்றில் சில:

1- அல்லாஹ்விடம் அவர் பிரார்த்தித்து, அவரது கையை ஒரு பாத்திரத்தில் வைத்த போது அவர்களின் கை விரல் களுக்கிடையிலிருந்து தண்ணீர் ஊற்றெடுத்து ஓடியது, அ திலிருந்து ஆயிரத்துக்கும் அதிகமான போர் வீரர்கள நீர் அருந்தினர்.

2- அல்லாஹ்விடம் அவர் பிரார்த்தித்து, அவரது கையை ஒரு பாத்திரத்தில் வைத்த போது பாத்திரத்திலுள்ள உணவு அதிகமானது. அதிலிருந்து தனது 1500 தோழர்கள் உணவ ருந்தினர்.

3- மழை இறக்கும் படி தனது இரு கைகளை உயர்த்தி, அல்லாஹ்விடம் துஆச் செய்தார்கள். அவர்கள் அவ்விடத் தை விட்டுச் செல்வதற்கு முன்பாகவே மழைத் தண்ணீர் அவர்களின் சிறப்பான முகத்தில் சொட்டுச் சொட்டாக

விழுந்தது. இன்னும் இது போன்ற அநேக அற்புதங்கள் உள்ளன.

ரசூல் (ஸல்) அவர்கள் தங்கள் சொல், செயல் அனைத்திலும் ஓர் அழகிய முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்கள். அல்லாஹ்விடமிருந்து வரும் ஆணைகள் அனைத்தையும் அவர்களே முதலில் செயல்படுத்துபவர்களாக இருந்தனர். வணக்க, வழிபாடுகள் செய்வதில் மிக்க ஆர்வமுடையவர்களாக இருந்தனர்.மனிதர்களில் மிக்க மரியாதைக்குரியவராக இருந்தனர். தன்னிடமுள்ள பொருள்கள் அனைத்தையும் - அல்லாஹ்வின் பாதையில் - ஏழைகள், தரித்திரர்கள், தேவையுடையோருக்குச் சிலவிட்டனர்.மட்டுமின்றி தான் விட்டுச்சென்று சொத்தையும் அல்லாஹ்வின் பாதையிலேயே சிலவிட்டனர். (ஸல்) அவர்கள் தனது நண்பர்களிடம் கூறினார்கள்: நாங்கள் நபிமார்களின் கூட்டத்தைச் சார்ந்தவர்கள், எங்கள் சொத்துக்கு எவரும் உரிமை பெறமுடியாது, நாங்கள் விட்டுச் செல்பவை தர்ம நிதியாகும்.

அவர்களின் நற்குணத்தை எவரும் அடையமுடியாது, அவரை தோழமை கொள்ளும் எவரும் தனது உள்ளத்தின் ஆழத்திலிருந்தல்லாமல் நேசம் கொள்வதில்லை. இதனால் (ஸல்) அவர் கள், அவர்களிடம் தங்களின் பிள்ளைகள், பெற்றோர்,மற்றோர் அனைவரை விடவும் அன்பிற்கு ரியவராகிவிடுகிறார்.

**இஸ்லாத்தின் கடமைகள்:**

1 - சாட்சி பகர்தல்: வணக்கத்திற்குத் தகுதி யானவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை, முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத் தூதரென சாட்சி பகர்வது. இதுவே இஸ்லாத்தில் நுழைய விரும்புபவர் கட்டாயம் கூற வேண்டிய முதல் வார்த்தையாகும். இதைக்கூறுபவர் இதன்

அர்ந்தங்கள் அனைத்தையும் நாம் முன்னர் விளக்கிக் கூறி யது போன்று உறுதி கொண்டவனாகக் கூறவேண்டும்.

நிச்சயமாக அல்லாஹ் ஒருவனே, அவன் யாரையும் பெறவு மில்லை, யாராலும் பெறப்படவுமில்லை, அவனுக்கு நிகராக எவருமில்லை. நிச்சயமாக அவனே படைப்பவன், அவனல் லாத அனைத்தும் அவனால் படைக்கப்பட்டவை. அவன் மட்டுமே வணங்கத் தகுந்தவன் என உறுதியாக நம்பிக் கைக் கொள்ள வேண்டும். அவனல்லாத வேறு கடவுளில்லை, அவனல்லாத வேறு இரட்சகனில்லை, முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாவார், அவருக் கு அல்லாஹ்வின் மூலம் வானிலிருந்து வஹீ இறங்குகிறது. அவனது ஆணைகளையும் விலக்கல்களையும் எத்திவைப் பார். அவர் அறிவித்தவற்றை உண்மைப்படுத்துவதும் அவர் ஏவியவற்றிற்கு வழிப்படுவதும் அவர் எச்சரித்து விலக்கிய வற்றைத் தவிர்ந்து கொள்வதும் கட்டாயமாகும்.

2 – தொழுகையை நிலை நிறுத்துதல்: இது ஒரு நாளுக்கு ஐந்து வேளைகளாகும். தொழுகையில் அடிமைத்தனத்தின் அம்சங்களையும் அல்லாஹ்வுக்குப் பணிவதையும் வெளிப்ப டுத்த வேண்டும். குர்ஆனின் ஆயத்துக்களை அடியான் ப ணிவுடன் ஓதிக் கொண்டு நிற்க வேண்டும். திக்ர், புகழின் வகைகள் கொண்டு அல்லாஹ்வைக் கண்ணியப்படுத்த வேண்டும். அவனுக்காக குனியவும் சாஸ்டாங்கம் செய்யவும் அவனிடம் உரையாடவும், பிரார்த்திக்கவும் வேண்டும். அவனது மகத்தான உதவியை வேண்ட வேண்டும். இது வே அடியானுக்கும் அவனைப் படைத்த நாயனுக்கு மிடை யேயுள்ள தொடர்பாகும். அவன் இவனது இரகசியத்தையும் பரகசியத்தையும் சாஸ்டாங்கம் செய்பவர்களுடன் சாஸ் டாங்கம் செய்வதையும் அறிகிறான். இது அல்லாஹ் தனது அடிஅயானை நேசிப்பதற்கும் அவனை நெருங்குவதற்கும்

அவனின் திருப்பொருத்தத்தைப் பெறுவதற்கும் காரணமாக வுள்ளது. அல்லாஹ்விற்கு வணக்கம் செலுத்துவதை விட்டும் பெருமை கொண்டவனாக யாரேனும் இதை விட்டு விட்டால் அல்லாஹ் அவன்மீது கோபம் கொள்கிறான், அவனை சபித்து விடுகிறான், அவன் இஸ்லாத்தைவிட்டே வெளியேறிவிடுகிறான்.

3 – ஜகாத்: இது மூலதனச் சொத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையாகும். இதை அல்லாஹ் செல்வந்தர்களுக்குக் கடமையாக்கியுள்ளான். இது தகுதி வாய்ந்த தரித்திரர்கள், ஏழைகளின் தேவையை நிறைவேற்றுவதற்காக கொடுக்கப் படும். நாணயங்களில் இதன் அளவு இரண்டரை சதவிகிதமாகும். இது மூலச் சொத்திலிருந்து ஜகாத் யாருக்குக் கடமையாகுமோ அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் கொடுக்க வேண்டும். இக்கடமை சமூக மக்களிடையே கூட்டு வாழ்க்கையில் பிணைப்பையும் அன்பு பரவுவதற்கும் அவர்களிடையே பரஸ்பர உதவி ஏற்படுவதற்கும் ஏழைகள் பணக்காரர்கள் மீது பொறாமை கொள்வது அகன்று விடுவதற்கும் காரணமாக இருக்கிறது.

4 – நோன்பு: இது அதிகாலை உதயமானதி லிருந்து சூரியன் மறையும் வரை அல்லாஹ்விற்கு வணக்கம் செலுத்தும் எண்ணத்துடன் உண்ணல், குடித்தல், மனைவியுடன் கூடல் போன்றவற்றை விட்டுவிடுவதாகும்.

ரமழானில் நோன்பு நோற்பது கடமையாகும். அது அரபி மாதக் கணக்கின்படி ஒன்பதாவது மாதமாகும். அம்மாதத்தில் தான் நபி (ஸல்) அவர்களுக்குக் குர்ஆன் இறங்கத் தொடங்கியது. நோன்பின் மிகப்பெரும் பிரயோஜனங்கள் பொறுமையாக இருக்கப் பழகிக்கொள்வது, இறையச்சத்தை வலுப்படுத்திக் கொள்வது, உள்ளத்தில் உறுதியான நம்பிக்கையை ஏற்படுத் திக் கொள்வது போன்றவையாகும். நோன்பு அல்லாஹ்விற்கும்

அடியானுக்குமிடையேயுள்ள ஓர் இரகசியமாகும். ஏனெனில் மனிதன் தனித்திருக்கும் சமயத்தில் நோன்பை விட்டு விட்டு உண்ணவும் குடிக்கவும் சக்தி பெறுகிறான், ஆயினும் இப்படிச் செய்வதை அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறிய மாட்டார்கள் எனத் தெரிந்து கொண்டே இவற்றை யெல்லாம் விட்டு விடுகிறான். மேலும் இது இறையச்சமும் இறை நம்பிக்கையும் அதிகரிப்பதற்குக் காரணமாக உள்ளது. இதனால் தான் நோன்பாளிக்கு மகத்தான கூலி கிடைக்கிறது.

5 – **ஹஜ்**: கண்ணியமிக்க அல்லாஹ்வின் இல்லத்தைத்தரிசிப்பது. இது முஸ்லிமானவன் வாழ் நாளில் ஒரு முறை நிறை வேற்றுவது கட்டாயக் கடமையாகும். எனவே ஒரு முஸ்லிம் ஹஜ்மாதத்தில் மக்காவின் வணக்கங்களுக் குரிய இடங்களுக்குப் பயணம் மேற்கொள்ள வேண்டும். இது அரபி மாதங்களில் கடைசி மாதமாகும். மக்காவுக்கு நுழையு முன் தான் அணிந்திருந்த ஆடைகளை கழற்றி விட்டு, இஹ்ராமிற்குரிய ஆடைகளை அணிந்து கொள்ள வேண்டும். இஹ்ராம் ஆடைகளென்பது இரு வெண்மையான ஆடைகளுக்குச் சொல்லப்படும்.பின்னர் கஃபாவை வலம்வருதல், ஸஃபா, மர்வாக்கிடையே ஓடதல், அரஃபாவில் தங்குதல், முஸ்தலிஃபதவில் இரவு தங்குதல் போன்ற ஹஜ்ஜின் செயல்களை நிறைவேற்ற வேண்டும். ஹஜ் முஸ்லிம்களை அனைவரையும் பூமியில் ஒன்று சேர்ப்பதில் மிகப் பெரியதோர் வணக்கமாகும். இது அவர்களிடையே சகோத ரப் பாசம், அன்பு, உபதேசம் முதலியவற்றை உறுதிப்படுத்துகிறது. ஒரே ஆடை, ஒரே வணக்கம். அவர்களில் ஒருவர் மற்றொருவவை விட இறையச்சம் கொண்டல்லாமல் சிறப்புக் குரியவராக மாட்டார்.

இறைவனுக்கு மட்டுமே வணக்கம் செய்ய வேண்டுமென பிரகடனப்படுத்தும் மார்க்கம் தான் இஸ்லாமிய மார்க்கமாகும்.

அதற்குரிய அடையாளம் லாஇலாஹ இல்லல்லாஹ்வாகும். இதுவே அல்லாஹ் தனது அடியார்களுக்குத் தேர்ந்தெடுத்துக் கொண்ட மார்க்கமாகும். இஸ்லாமல்லா ததை எவரிடமிருந் தும் மார்க்கமாக ஏற்றுக் கொள்ள மாட்டான்.

இதை ஏற்று நற்கருமங்கள் செய்பவன் அருள்மிக்க சுவர்க்கம் பெற்று, வெற்றி பெற்றவர்களில் இருப்பான் என்று கூறும் மார்க்கம் தான் இந்த இஸ்லாம் மார்க்கம். இம்மார்க கம் மனிதர்களில் எந்தக் கூட்டத்தினருக்கோ, குறிப்பிட்ட மனிதருக்கோ சொந்தமானதல்ல. எனவே யார் இம்மார்க்கத் தை ஏற்று அதன் பால் பிறரை அழைக்கிறாரோ அவரே மக்க ளில் மிகச் சிறந்தவர். அவரே அல்லாஹ்விடம் மிகுந்த மரியா தைக்குரியவர்.

மனிதர்களுக்கும் இம்மார்க்கத்திற்கு மிடையே திரும் பத் திரும்ப வரக் கூடிய சில முக்கியமான விஷயங்களையும் அவர்களை இஸ்லாத்தில் நுழை வதைத் தடுக்கக் கூடிய சிலவற்றையும் படிக்கக்கூடிய நன் மக்களுக்கு உணர்த்துவது நமது கடமையாகும் .

1 – **அறியாமை:** இஸ்லாமிய மார்க்கத்தின் கொள்கை, சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை அறியாமலிருப்பது. மனிதர்கள் தாங் கள் அறியாதவற்றிற்கு பகைவர்கள். எனவே இஸ்லாத்தை அறிய விரும்புபவர் இம்மார்க்கத்தை அறிந்து கொள்வதற் காக இதன் மூலஅடிப்படைகளை, சத்தியத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்ற நேர்மையான சிந்தனையுடன் பல முறைப் படிக்க வேண்டும்.

2 – **பிடிவாதம்:** நன்கு சிந்திக்காமால் தனது மக்கள் வளர்ந்து வந்த மார்க்கம், பழக்க வழக்கங்கள், கலாச்சாராம் ஆகிய வற்றில் பிடிவாதமாக இருப்பது. தான் வளர்ந்து வந்திருக் கின்ற மார்க்கமே சரியானதென எண்ணுவது, சமுதாயப் பி டிப்பை பற்றிக்கொள்வது. தனது பெற்றோர், பாட்டன் மார்க்

கமல்லாத மற்றய மார்க்கங்களை விட்டுவிடுவது. பிடிவாதம் இரு கண்களையும் சத்தியத்தை ஏற்றுக் கொள்வதைவிட்டும் மூடிவிடும். காதுகளை அடைத்துவிடும். அது சமயம் மனிதன் சுயமாகவும் நேர்மையாகவும் சிந்திக்க மாட்டான். இருளுக்கும் ஒளிக்குமிடையே வித்தியாசத்தைக் காண மாட்டான்.

3 – **மனோ இச்சைகள்:** இவை சிந்தனைகளையும் நோக்கங்களையும் தாம் விரும்புகின்ற இடங்களின் பால் செலுத்தி விடும். சத்தியத்தை ஏற்றுக் கொள்வதையும் அதற்குக் கட்டுப்படுவதையும் விட்டு பலமாகத் தடுத்துவிடும்.

4 – **முஸ்லிம்கள் சிலரிடமுள்ள மூடப் பழங்கக்களும் தவறுகளும்:** இவை ஒருவனை தவறச் செய்யவும் தவறவானவற்றை இட்டுக்கட்டவும் செய்துவிடுகிறது. ஆனால் இஸ்லாம் இதை விட்டும் அப்பாற்பட்ட மார்க்கமாகும். மனிதனின் தவறுகள் பற்றி கேட்கப்படும் மார்க்கமல்ல அல்லாஹ்வின் மார்க்கம் என எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டும்.

**சத்தியத்தையும் நேர்வழியையும் அறிந்து கொள்ள மிக எளிய வழி என்னவென்றால் அடியான் நிரந்தரமான, பாக்கியமிக்க அதன் பின் கேடே ஏற்படாத வாழ்க்கையைப் பெற இறைவனிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும். நிச்சயமாக அல்லாஹ் பிரார்த்திப்பவரின் பிரார்த் தனைக்குப் பதிலளிப்பவன் என அறிந்து கொள்ள வேண்டும்.**

تاميلي

# الدين الحق

Co-operative office for Call & foreigners Guidance

ردمك : ٩ - ٢٣ - ٨١٣ - ٩٩٦٠

المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بسلطانة
تحت إشراف وزارة الشؤون الإسلامية والأوقاف والدعوة والإرشاد
هاتف : ... ناسوخ ... ص ب ... الرياض ... بريد الكتروني Sultanah2257@hotmail.com E.mail :
شركة الراجحي المصرفية حساب رقم : ٨-٢١-١٩٥